முரசொலி

வார இதழ்

2 அணா

ஆசிரியர்.. மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | 9 — 7 — 54 | ஒலி 15

சங்கும் — சக்கரமும்!

முத்துப் பல்லக்கு — அதிலே மாங்காய் மாலை அணிந்த மாயவன். இந்த அலங்காரக்காட்சியைக்கண்டு, "அய்யனின் சித்ர சிம்மாசனத்தைப்—பார்த்தாயா! சிந்தை குளிர்விக்கும் காட்சியே காட்சி!" என்று கைகூப்பி கண்ணீர் மல்கும் பக்தர்கள் பட்டாளம் ஒரு பக்கம். இறைவனை இந்திரன் போல அலங்கரித்திருக்கும் அற்புதமே அற்புதம் என்று மகிழ்ச்சிப் பள்ளுபாடும், ரசிகர்கள் ஒருபுறம்! இரவைப் பகலாக்கும் வானவேடிக்கைகள், காற்றோடு கலந்து வரும் கானலோலங்கள் — இவைகளிலே லயித்து நிற்பவர் பலர். தூபதீப நைவேத்யங்களிலே தோய்ந்து, திவ்யபிரபந்தத்தின் ஏடுகளைப் புரட்டும் சில சிரோன்மணிகள்— இத்தனையும் ரசிப்பவர்கள் — பரவசத்தோடு பார்த்து நிற்பவர்கள் மறந்து விடுவர் ஒரு காட்சியை. நான்கு வீதிகளிலும் நாயைப்போல இறைக்கஇறைக்க பல்லக்கை சுமந்த தோழர்களின் நிலையைப்பற்றி யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆம்; கட்டுச்சோற்றுடன் கால்கடுக்க நடந்து அய்யனை தரிசிக்க வந்தவர்கள் — பட்டு பீதாம்பரத்துடன் பட்டர்தரும் பிரசாதத்தைச் அணிபவர்கள் —மறந்து விடுவார்கள், தோள்கடுக்க தேவனைத் தூக்கி வருபவர்களின் நிலைபைப்பற்றி! தேவராஜனின் இரத்தினப் பதக்கத்திலே சிரத்தை செலுத்தியவர்களின் சிந்தனை, இரத்தநிறமாகி விட்ட அந்த 'வாகனம் தூக்கிகளை'ப் பற்றி கவலை கொள்ளாது. தேங்காய் மூடிபெற்று: தீப ஆராதனை செய்யும் பூசுரர் —கீழே தாங்கொணுத் துயரத்தோடு அவரையும் சேர்த்துத்தூக்கும் திராவிடத்தோழன் — ஏன் இந்தநிலை என்ற கேள்வி எழாது; பின்தொடர்வர் பக்த கோடிகள்.

அய்யனின் சேவடி தொழுவான்; திருவருள் பெற காவடி தூக்குவான்-எல்லாம் திராவிடன் தான் செய்வான்! உச்சிமீது அமர்ந்து—திரு நீற்றுப் பையை தடவியபடி திருஉலா வருவான் — அந்த இனமெல்லாம் ஆரியம் தான்! இப்படி திராவிடச் செல்வன் திருவடி தூக்கும் படலம் கோவில் மண்டபத்தில் மட்டுமல்ல; கொலு மண்டபத்திலும் இந்த கொலைபாதகச் செயல்தான் நீடிக்கிறது.



செல்வம் சேமித்து—'வரி' என்கிற பெயரில் வடவரிடம்கொடுக்கிறோம் — ஆனால் அலகாபாத் அய்யராம் நேருப்பண்டிதர் நைவேத்யம் செய்ய, அமெரிக்க பிரபுக்களும் மற்ற வெளிநாட்டு துரைகளும் அந்த தீப ஆராதனையை ரசிக்க, சென்னை மாகாணம் மட்டும் வாகனம் தூக்குபவன் நிலையிலே இருக்கிறது. இங்கே சுரங்கமுண்டு; அதை சுரண்டுபவர்கள் வடவர்கள். இங்கே ஆலையுண்டு; அதை ஆட்டிப் படைப்பவர்களும் அவர்கள்தான்! ஆம்! திருவிடத்து தோள்களிலே இந்திய உபகண்டத்து அரசியலென்னும் பல்லக்கை ஏற்றி அதில் வடக்கத்தி வீரர்கள்பவனி வருகிறார்கள். சமீப காலத்துச் செய்திகள் யாவும் இந்த உவமையை உறுதிப்படுத்துவது போலவே அமைந்திருக்கின்றன.

தென்னகம் மும்மருங்கிலும் நீலப்பெருங்கடல் சூழ்ந்த நாடு. அந்த அலைகடலின் அடியிலே ரோமாபுரியின் சீமாட்டிகளை சிங்காரித்த முத்து உண்டு; பவழமும் உண்டு! அதுமட்டுமல்ல மென்கரங்களிலே அமர்ந்து கானம் எழுப்பும் வளையல்களின் மூலப்பொருளும் இங்கேதான் விளைகிறது. நாகை, கடலூர், தூத்துக்குடி போன்ற இடங்களிலே கிடைக்கும் பெயர் பெற்ற சங்குகளிலிருந்து' உயர் தரமான வளையல்கள் செய்கிறார்கள்.

சென்ற வாரம் மேற்கு வங்காள அரசாங்கம் தங்களது மாகாண வளையற் தொழிற்சாலைகளுக்கு சங்குகள் தேவைப்படுவதாகவும், அதற்காக இங்கே விளையும் சங்குகளை மொத்தமாக அனுப்பி வைக்க வேண்டுமென்றும் சென்னை அரசாங்கத்தை கேட்டிருந்தது. நமது கடற்கரை ஓரங்களிலே சங்கு பொறுக்கி அதைக் கொண்டு வித விதமான ஆபரணங்கள் செய்து பிழைத்து வந்தவர்கள் வயிற்றில் அடிக்க முடிவு செய்து விட்டதாம் சென்னை அரசாங்கம். இந்த சங்குகள் இனி மொத்தமாக மேல் வங்கத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட இருக்கின்றன.

காளையின் கழுத்திலே வெண் சங்கு ஆரம் சூட்ட நினைக்கும் குடியானவர்கள் இனி தங்கள ஆவல் பூர்த்தியாக மேற்கு வங்கத்து வியாபாரிகளை எதிர் நோக்கவேண்டும். :ச தங்கை போல குலுங்கி, வேல் விழியால் சொல்ல முடியாத செய்தியைச் சொல்லிடும் வளையல்கள் இனி மேற்கு வங்கத்திலிருந்து இறக்குமதியாகி திராவிடத்துத் தெருக்களை முற்றுகையிடலாம்.

இங்கே, பொறுக்கப்படும் சங்குகள் — அவை வடக்கே அனுப்பப்படுமாம்; பின்னர் வளையல்களாகமாறி திரும்பவும் இங்கே வந்து வெள்ளிப் பணமாகுமாம்; மறுபடியும் அது மூல்தானியின் இரும்புப் பெட்டிக்குள்ளே புகுந்து கொள்ளுமாம்; விந்தையாகத்தான் இருக்கிறது வடக்கத்தியாரின் சுரண்டும் கொள்கை! அதைவிட விந்தையான செய்தி! குடிசைத் தொழிலை பெருக்க திட்டங்கள் போட்டிடும் தென்னாட்டு வார்தா வீரர்கள், இங்கே விளையும் சங்கை பயன்படுத்துவோர் இனிபடப்போகும் அவதியை பொருட்படுத்த மாட்டார்களாம்!

வடவரின் செயலை நினைக்குந்தோறும் நம் நெஞ்சு குழைகிறது. தென்னகத்திலே விளையும் சங்கு—அதை தங்குதடையின்றி வடக்கே அனுப்பும் வெட்கங்கெட்ட செயல்-கடலையும் சுரண்டத் துவங்கிவிட்டார்கள் வடக்கத்திய சேட்டுகள்!

வங்காளத்து வளையல்கள் இனி நமது வீடுகளை வளைக்கப் போகின்றன. "வளையல்களா அவைகள்? இல்லை; இல்லை; எமது அன்னையின் கரம்பூட்டும் தளைகள்" என்று முரசறைகிறோம் நாம். இது கேட்கவில்லை காமராசருக்கு; கேளாக்காதினராகி விட்டனர் அவர்தம் சிஷ்யகோடிகள். இலங்கைக்கும், மலாயாவிற்கும் சென்ற சகோதரர்களை நினைத்து ஏங்கியபடி சங்கு கிடைக்காததால் வேலையற்றுப் போனவர்கள் அணி அணியாக—இனி தென்புலத்துக் கடலோரங்களிலே ஊர்வலம் வருவார்கள்; அவர்களின் பரந்ததோள்களிலே வங்காளத்து வட்டி வேந்தர்கள் பல்லக்கை ஏற்றிவிட்டார்கள்!

திராவிடத்தில் சங்கு விளைகிறது—அதை அறுத்து எடுத்துச் செல்லும் சக்கரம் வடநாட்டு நேரு வேந்தரின்கையிலே

[6-ம் பக்கம் பார்க்க]

காணிக்கை வேண்டுமாமே!

★ தென்னரசு ★

"தென்னிந்தியாவில் கோயில்களுக்கு காணிக்கை, உபயம் இவைகள் மூலம் வரும் வருமானம் குறையவில்லை. ஆனால் ஜமீன் ஒழிப்புச் சட்டம், வாடகைக் கட்டுப்பாடு, இவைகள் மூலம்தான் கோயில் வருமானம் மிகக் குறைந்துள்ளது"

இப்படி ஒரு செய்தி இரண்டு தினங்களுக்கு முந்திய தின இதழ்களில் வெளிவந்திருக்கிறது.

சர்க்காரின் இந்த அறிக்கை, "பிச்சையும் யெடுக்க வேண்டும்—ஆனால் பிறந்த இடத்துக் கவுரவமும் போய்விடக்கூடாது" என்று ஒரு புதிய முதுமொழியை நம் இதயத்தில் உருவாக்கத் தூண்டுகிறது.

உபயம், காணிக்கை, இவைகள் மூலம் வருமானம் குறையவில்லையாம்—சர்க்காரின் சட்டங்களால்தான் வருமானம் குறைந்து விட்டதாம்.

அறிக்கை அதோடு நிறுத்தப்பட்டிருந்தால் நாமும் எண்ணியிருப்போம் அதிலே காணப்பட்டிருக்கும் வாசகம் உண்மைதானென்று.

"கோயில்களுக்கு நன்கொடை அளிப்பதில் அதிகம்சிரத்தை காட்டி வந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் இப்போது வியாபாரத் துறையில் ஏற்பட்டுள்ள சிலதொல்லைகள் காரணமாக முன்போல கோயில்களுக்குச் செய்ய முன் வரவில்லை,"

அறிக்கையின் பிற்பகுதியில் குறிப்பிட்டிருக்கும் இந்த வாசகத்தைப் பார்க்கும்போதுதான் நாம் மேலே குறிப்பிட்ட விசித்ர முதுமொழி நெஞ்சில் எழுகிறது.

வாணிபத் தொல்லைகளால் செட்டிமார்கள் முன்போல கோயில்களுக்கு நன்கொடை செய்ய முன்வருவதில்லையாம்!—சர்க்கார் அறிக்கை செப்புகிறது இப்படி.

வருவாய் குறைவதற்குக் காரணம் வாணிபத் தொல்லையாம்—சேவார்த்திகள் குறையவில்லை என்பதை சொல்லாமல் சொல்ல எத்தணித்திருக்கிறது சர்க்கார்.

தொல்லையே அவர்களை காணிக்கை செலுத்துவதற்கு தடையாக இருந்திருந்தால், பர்மாவில் பெரும்போர் நடந்து கொண்டிருந்த போதும் ஏன் கும்பாபிஷேகம் நடத்தினர்கள்? பஞ்சத்தால் நெற்களஞ்சியங்கள் காலியாகி எளிகளின் ஏகபோக மாளிகையாக அது ஆக்கப் பட்ட போதும்ஏன்கோயில்களுக்கு ரிஷபவாகனங்கள் செய்து வைத்தார்கள்? தொல்லையே காரண மென்றால் இந்த உபயங்கள் ஏன்? எதற்காக செய்யவேண்டும்? வருவாய் குறைய வணிகத்தொல்லை காரணமாம்! சர்க்காரின் அறிக்கைப்படி தொல்லைதான் அதற்குக் காரணம் என்றாலும், அடிவானம் சிவக்கும் போது ஆரம்பித்த திருப்புகழை அந்தி சாய்ந்த பின்னும் வாயால் முணு முணுத்துக் கொண்டிருந்த அந்த வணிகர்குல மாந்தருக்கு தொல்லைகள் ஏன் வர வேண்டும்? கும்பாபிஷேகமா? கொட்டு பணத்தை! கருடசேர்வையா? இந்தா பத்தாயிரம்? என்று வேள்ளித் தோட்டாக்களை அள்ளித் தந்த அந்த செட்டிநாட்டு சீமான்களுக்கு தொல்லைகள் மூளத்தது ஏன்? காலமெலாம், கட்டிய மனைவியை மறந்து, கனிமொழிச் செல்வங்களைப் பிரிந்து, கடல் கடந்து, கழனிகள் மேற்பார்வைக் குச் சென்ற நாட்டுக் கோட்டை பிரமுகர்கள்-ஏன் அவர்கள் சொத்துக்களை பர்மாவிலே விட்டு வர நேர்ந்தது? உபயம் செலுத்திய உதாரண குணத்தினர்தானே அவர்கள்? காணிக்கை தந்தவர்களாயிற்றே! செய்த உபயங்களெல்லாம் — காணிக்கைகளெல்லாம் விழலுக்கிரைத்த நீராகி 'தொல்லை'களை விளைவிக்கும் போது ஏன் அவர்கள் கோயில்களுக்கு வரப்போகிறார்கள்! தொல்லைகளே காரணமாம்!

தொல்லைகளே காரணமென்கிற சர்க்கார்—தொல்லைகள் தோன்றியதேன் என்று கூறவில்லை. சுயமரியாதை இயக்கப் பிரச்சாரத்தாலும் சொந்த அனுபவத்தாலும் கடவுள் பக்தி குறைந்து வருகிறது என்று சொல்லக் கூடாதாம்—அப்படிச் சொன்னால் சுயமரியாதை இயக்கத்தை அல்லவா அந்தப் பெருமை சார்ந்து விடும்! அதற்காகத்தான் வருவாய் குறைய 'தொல்லை'யே காரணமென்கிறார்கள் போலும்! சுயமரியாதைக் கட்சியின் சூறுவளிப் பிரச்சாரத்தால் பாதகம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை — என்று பொருள்படும்படி கும்பகோணத்து மகாமகக் கட்சியை ஒருமுறை படம் எடுத்துப் போட்டுவிட்டு கல்கியார் பட்டபாடும் அதற்காக 'மன்னித்து விடுங்கள் — மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்' என்று கதறியதும் சர்க்காருக்குத் தெரியாது. இந்த நிலை சர்க்காருக்கு வராமல் இருக்கவேண்டும்! அறிக்கை முற்றுப் பெற்றுவிடவில்லை, தொடர்ந்து படியுங்கள்.

"கோவிலுக்கு வழிபாட்டுக்கு வரும் சேவார்த்திகளிடமிருந்து காணிக்கை களையும் உபயங்களையும் அதிகம் பெறமுயல வேண்டுமென்று அறநிலைய பாதுகாப்பு இலாகா கோயில் நிர்வாகிகளுக்கு உத்தர விட்டிருக்கிறது"

அறிக்கையின் முற்பகுதியில் "காணிக்கை குறையவில்லை என்ற ஆணவத்தொனி. ஆனால் பிற்பகுதியில் யாசகம்கேட்டுதும்ஏழ்மைக் குரல்! வழிபாட்டுக்கு வருவோரிடம் காணிக்கை வசூலிக்க வேண்டுமாம் காணிக்கை! இதோ காணிக்கை செலுத்தியிருக்கிறார்கள், ரத்தக் காணிக்கை, உயிர் காணிக்கை, பாருங்கள்!

பார்த்துவான் ஜூன் — 3

பர்துவான் மாவட்டத்திலுள்ள வைத்யபூர்என்னுமிடத்தில் நேற்றைய ரதோற்சவத்தின் போது தேர்சக்கரமேறி ஐந்து பேர் நசுங்கி மாண்டனர். இவரில் நால்வர் பெண்கள். ஒருவன் 10—வயது பாலகன்.

காணிக்கை கேட்போரே, போதுமா காணிக்கை? 10வயது கூட நிரம்பாத பாலகன் தன் பச்சை ரத்தத்தை கொட்டி, பிஞ்சு உயிரையும் பலி யிட்டிருக்கிறன் காணிக்கை கேட்போரே போதுமா காணிக்கை!

தாய்க் குலத்திலகங்கள் நால்வர், அவர்களின் ஜீவன்களை அந்த அரக்கத்தேர் உருளைக்குள் கொடுத்து நசுக்கிக் கொண்டிருக்கின்றனர்! இதைக்காட்டிலும் வேறு காணிக்கை, உபயம் எதை எதிர்பார்க்கிறீர்கள்? காணிக்கை கேட்போரே, போதுமா காணிக்கை!

அதோ கேட்கிறது பாருங்கள் துயரஒலி, பலியான பாலகனைப் பெற்றெடுத்த இல்லற ஜோடிகளின் இதய பேரிகை — அதையும் உபயமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். காணிக்கை கேட்போரே, காணிக்கை கேட்போரே, தேரடியிலே மாதாவைப் பறிகொடுத்த மழலைக் குழந்தைகள், மனையாளை இழந்த மணாளர்கள் இதோ ஆண்டவனைப் பார்த்து — தேரிலே கொலுவிருக்கும் தகடு மூடிய சிலையைப் பார்த்து ஆவேசக் கனல் எழுப்புகிறார்கள்; அதையும் உபயமாகப் பெற்றுக் கொள்ளுங்கள் — காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்—காணிக்கை வேண்டுமாம் காணிக்கை!

●

அறிவு ஜோதி-அங்குமா?

●

தினமணி ஜூலை 6-ம் நாள் இதழில் எழுதியுள்ள துணைத் தலையங்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் என்பதுபற்றி விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. இந்தியா முழுதும் 60,000 பேர்தான் கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கிறார்கள் என்று கூறிவிட்டு, பின்னர் —கம்யூனிசம் ஒரு வகைப் புதுமதம்; அதற்குரிய வெறிக் குணங்களை அதைப் பின் பற்றுவோரிடம் காணலாம் என்றும் எழுதியிருக்கிறது. கம்யூனிசம் ஒரு மதமா— இல்லையா என்பதல்ல, இந்த குறிப்புக் கட்டுரையில் விவாதிக்கும் பிரச்சினை— எப்படியோ தினமணியார், மதம் என்பது வெறிக் குணம் என்ற உண்மையை மறைக்க முடியாமலொத்துக் கொண்டார். அதுபோதும் —என்ற மகிழ்ச்சிதான் நமக்கு!—மதம், வெறிக் குணத்தின் அடிப்படையில் வளர்ந்து, மக்களையும் வெறிக்குண முடையோராக மாற்றி நாட்டைக் காடாக்குகிறது என்று நாம் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கு மறுப்புரை கூறத் திறனற்றவர்களும்— தேசிய ஏடுகளும், நம்மைத் தூற்றுவதில் மட்டும் காலத்தை செலவிட்டனர். இதோ தன்னையுமறியாமல் தினமணியாரின் பேனா தெளிவான உண்மையைக் கக்குகிறது, மதத்திற்கு உரியது வெறிக் குணங்கள் என்று! மகிழ்கிறோம். உண்மைக்கு போடப்படும் திரைகள் எப்படியோ கிழிந்து, விடுகின்றன— அறிவு ஜோதியை அணைக்க யாரால்தான் முடியும்?

அடுத்த இதழில்...

●

சுகம் எங்கே?

?

தலையங்கம்

சென்னை முரசொலி. (9—7—54) வெள்ளி

நாலு கல் மூக்குத்தி-நமது திராவிடம்

ஆந்திரத்தோடு தமிழகத்தின் பல பகுதிகள் இணைக்கப்பட்டு விட்டன. அவைகள் எல்லாம் தமிழ் நிலத்தோடு சேர்க்கப்பட வேண்டும் என்ற குரல் பலமாக ஒலித்துக் கொண்டிருக்கிற நேரமிது. உண்மையான இதயத்தோடு இரண்டறக் கலந்து எழும்பும் குரலும் உண்டு. ஏதாவது அரசியல் வாண வேடிக்கைகள் செய்து பெயர் மறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற அற்ப ஆசையின் எதிரொலியாகக் கிளம்பும் குரலும் உண்டு. இந்த இரண்டாவது குரல் திடீரெனப் புறப்படும்; திடீரென மறையும். ஆச்சாரியார் அமைச்சராக இருந்தபோது இந்தக் குரல் கொஞ்சம் ஒலித்தது. பிறகு தானகவே ஓடி ஒளிந்தது. ஆச்சாரியாரின் அத்யந்த சீடர்களை வழி காட்டிகளாகக் கொண்டு சில அப்பாவித் தொண்டர்கள் முழக்கிய அந்த முரசம், வீர முரசமாக சில விநாடிகள் இருந்து, பிறகு ஈர முரசமாக மாறிப் போய்விட்டது; இப்போது மீண்டும் அந்தப் போலிக்குரல் புறப்பட்டிருக்கிறது. புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போலப் புறப்படுவோம் போருக்கு என்கிறது அந்தக் குரல்! "பாவம்"—ஈசற் பூச்சியின் வீரம், அதன் சிறகு உள்ள வரையில் தான்—சிறகு சிறிது நேரம்கூட இருப்பதில்லை. அதுபோலவே இந்தப் போலிக்குரல் வீரர்கள் போர் போர் எனக் கர்ஜிப்பதும் பிறகு போர்த்திக் கொண்டு படுத்து விடுவதும் தமிழனின் தலைகொடுக்கும் பண்பு எனக்கருதி வாள்தூக்கி வாளாயிருக்கிறார்கள். ஆச்சாரியார் காலத்தில் இல்லாத கண்டனக் கணைகள்—கிண்டல் பாணங்கள்—காமராசர் ஆட்சியை நோக்கிப் படையெடுக்கின்றன, இந்தப் போலிப் பாசறை சூரர்களால்!

புனிதமான லட்சியம்—போராடிப் பெற்றிட வேண்டிய லட்சியம்—தமிழர்களின் நிலப் பரப்புகள் ஆந்திரத்தோடு இணைக்கப்பட்டிருப்பதை நாமும் வருத்தத்தோடு கண்டிக்கிறோம். தமிழரையும் ஆந்திரரையும் எப்படியாவது மோதவிட்டு, முளை விட்டுக் கிளம்பும் திராவிட இன உணர்ச்சியைப் பாழ்படுத்திவிட எண்ணும் பண்டிதர் அரசை பலமாகக் கண்டிக்கிறோம். போலிக் குரல் கிளப்பும்—புழுதி மண் வீசிகளைப் போல அல்லாமல் உண்மை நெஞ்சத்தோடு உரிமைப் போர்க் களத்திலே குதித்தோம்—இப்போதும் குதிக்கத் தயாராக இருக்கிறோம். காமராசரை எதிர்த்துத் தீரவேண்டும் என்ற கங்காணி புத்தியோடு அல்ல; கடமைக்கு எதிராக நிற்போர் அனைவரையும் கண்யமுடன் சமாளித்து, களம் புகுவோம் என்ற உரிமை உணர்ச்சியுடன்—இலட்சியக் கண்ணோட்டத்துடன்—அன்பின் அடிப்படையிலே—ஆந்திரரும் நமது சகோதரரே என்ற இன முழக்கத்துடன்—சித்தூர் பிரச்சினையை நாம் அணுகுகிறோம். போர் முனையில் நிற்க வேண்டியவர்கள் ஆந்திரரும், தமிழரும் அல்ல; ஆதிக்கபுரி மன்னராம் நேருவும் நாமும் தான் என்பதை இங்குள்ள போலிக்குரல் தலைவர்களுக்கும், இதுபோலவே ஆந்திரத்து மக்களிடை ஆத்திரப் பிரச்சாரம் புரிந்து வரும் அங்குள்ள ஆந்திரத் தலைவர்களுக்கும் நாம் பலமுறை அறிவித்திருக்கிறோம். திராவிடநாடு என்ற கூட்டாட்சியைக் கோரும் நாம், ஆந்திரத்தையும் சேர்த்துத்தான் கோருகிறோம். தமிழர் மட்டுமல்ல; தெலுங்கரும்—மலையாள மாந்தரும், கன்னடச் சோதரரும் மொழிவழியாகப் பிரிந்து, இன வழியாக இணைந்து; வடவர் பிடியிலிந்து விடுபட வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக்கழகத்தின் குறிக்கோள்—கொள்கை முரசம் இனவழியாக இணைந்திட—மொழிவழியாகப் பிரியும் போதே—இடையில் எழும் பூசல்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்—வரப்புகளை சரிப் படுத்திக்கொள்ள வேண்டும்—அப்போதுதான் வயலிலே வளத்தைக் காண முடியும் என்ற கொள்கையின் அடிப்படையிலேதான் தி. மு. கழகம் பணியாற்றி வருகிறது. சித்தூர் பகுதிகள் தமிழகத்தோடு இணைய வேண்டும் என்பது போலத்தான், நாஞ்சில் பகுதிகள் தமிழகத்தோடு இணைந்திட வேண்டும் என்று தி. மு. க. விரும்புகிறது.

திராவிட நாடு என்பது தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் சேர்ந்த ஒரு நாலுகல் மூக்குத்தி. கற்களைப் பதிய வைத்து மூக்குத்தி வேலையை முடிப்பதற்கு முன்பே—கற்களை ஒழுங்காகப் பட்டைதீட்டி, அவைகளைப் பதிய வைக்கும்கட்டடங்களைசரிப்படுத்திக் கொள்ளும் பொற் கொல்லரைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகம் மொழிவழி மாகாணப் பிரிவினை அமைவது சரிவர அமையட்டும்; சச்சரவின்றி அமையட்டும் என்று முழங்குகிறது. அந்த சச்சரவினல் தான் திராவிட இன ஒற்றுமையை நசுக்க முடியும் என்று நேரு கருதுவாரேயானல், அதற்காகவே இந்தச் சிறு பூசல்களை மலையென வளர்ப்பாரேயானல் தி. மு. கழகம். அவரது போக்கை எதிர்த்து தனது போர்க் கொடியை உயர்த்திடத் தயங்காது! முன் பொருமுறை—ஆம் சென்ற ஆண்டு—அவரது கண்ணைத் திறக்க நமது கழகக் காளையர் நூற்றுக் கணக்கானோர் சித்தூர்-திருத்தணிப் பகுதிகளிலே வடாற்காடு மாவட்ட செயலாளர் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமையிலே சித்தூர் பகுதிகள் தமிழகத்தோடு சேரவேண்டும் என்ற முழக்கம் எழுப்பி சிறைப்பட்டனர். தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்தனர் — உண்மையிலேயே தலை கொடுத்துத் தமிழ்ப் பகுதிகளைக் காப்போம் என்ற உறுதியுடன்! அப்போதுதான் நேரு கண்ணைத் திறப்பதற்கு பதிலாக இரண்டாம் முறையாக தன் வாயைத் திறந்தார்—'நான்சென்ஸ்' என்ற நறுமணச்சொல்லை வீசினர். அதன் விளைவையும் அனுபவித்தார். தென்னகத்தில் நேருவுக்கு எதிராக கொழுந்து விட்டெரியும் தீஜ்வாலையின் வேகத்தை அகில உலகமும் அறிந்து கொண்டது. தமிழகப் பகுதிகளை விடுவித்து, ஆந்திருடனும், மலையாள, கன்னடியருடனும் கை குலுக்கி களம் அமைத்திடும் தூய பணியில் ஈடுபட்டிருக்கும் கழகம்; இதோ பொதட்டூர் பேட்டையில் சித்தூர் மாவட்ட மாநாட்டைக் கூட்டுகிறது ஜூலை 10, 11 நாட்களில்!—மிக முக்கியமான நேரம்—நரிகள் புதரைவிட்டுக் கிளம்பும் நள்ளிரவு—கோட்டான்கள் கத்தும் கோரம் நிறைந்த பாதை-மலைப்பாம்போ-மரத்துண்டோ—என ஐயுற்று நடக்க வேண்டிய பயங்கரமான காட்டுவழி—அந்த வழியிலே நாம், விழி மூடாத நிலையிலேதிராவிட இன உணர்ச்சித்தீபம் கையிலேந்தி அறப்போர் வாளுடனே பயணம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலே சித்தூர் குறுக்கிடுகிறது நம் சிந்தைக்கு சிறிது ஆறுதல் அளிக்கிறது. பொதட்டூர் பேட்டை, காட்டுவழி நடக்கும் நமக்கு களைப்பாற்றும் பொழிலாகத் தோற்றமளிக்கிறது.

முதல் நாள் சமுதாய சீர்திருத்த மாநாடு—புரட்சிப் பொறி பொன்னம்பலனர் தலைமை வகிக்க-நடிப்புக்கோர் புலவர்—நாட்டின் இதயத் துடிப்புக்கோர் மருந்து தோழர் கே. ஆர். ராமசாமி திறந்து வைக்க, மறு நாள் அரசியல் மாநாடு, செயல் வீரர் அரக்கோணம் தந்த அறப்போர்க்காளை தோழர் ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி தலைமை வகிக்க, திராவிட நாடு துணை ஆசிரியர்—தித்திக்கும் எழுத்தால்—தென்றல் நடைத் தமிழால் சிந்தை குளிப்பாட்டும் ஏந்தல், சகோதரர் அரங்கண்ணல் திறந்து வைக்க—புரட்சி நடிகரும், பகைவர் கோட்டம் மிரட்சியால் நடுங்கிடப் பணிபுரியும் காளையும், கொள்கைக்கோர் இமயமுமான கெழுதகை நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் 'இன்பக் கனவு' தர—இயக்கத்தின்பிரச்சாரகரா—நாடக இலக்கியத்தின் நற்றெண்டரா — எதையும் ஏற்று கழகப்பணி புரியும் நண்பர் ராஜேந்திரன் "சந்திரமோகனே" சரிதச்சான்றுக் கழைத்திட புதுமைக் கருத்துக்களை அள்ளிப்பருகி, புரட்சிப் பண்பாடிடப் போகின்றனர் பொதட்டூர் பேட்டையில் கூடுவோர் அனைவரும்!

சுந்தரத் தெலுங்கினிலே கீதம் கேட்கும்—சுவையான தமிழினிலே இசைபொழியும்—அருமை அண்ணாவின் பெருமைமிகு சொற்கள் அங்கு குழுமியிருப்போர் அனைவரையும் கொள்கைக் குன்றங்களாக்கும்! வாரீர்-வாரீர்-என அழைக்கிறார்கள்; வரவேற்புக் குழுவினர்களான-வண்ணத் திராவிடச் செல்வங்களான ஏ. டி. கே. ராமசாமி, ஈ. எம். கோதண்டபாணி, என். கே. எஸ். கணேசன், எஸ். கேசவன் ஆகியோர்!

அவர்களோடு சேர்ந்து நாமும் உங்களை அழைக்கிறோம்—வாரீர்! திராவிடப் பெரும் படையினில் உமது பங்கைத் தாரீர்! தாரீர்! என்று!

புதையல்

★

வண்ண ஓவியங்களுடன் தொடர்ந்து வெளி வர இருக்கும் "புதையல்" தொடர் கதை, நமது சித்திரக் காரருக்கு உடல் நலமில்லாத காரணத்தால் ஆகஸ்டு 6-ந் தேதி முதல் வெளிவரும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன். ஆகஸ்டு 6 முதல் அதிக பக்கங்களுடன் தொடர் கதையுடன் "முரசொலி" வெளிவரும்.

— ஆசிரியர்.

வளமெங்கே? - சொல்லுங்கள்!

சென்றவாரம் மாநிலம் எங்கும் மரம்நடும் விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. வளர்ந்த செடிகளுக்கு உரம்விடும் உற்சவம் வேறு நடந்திருக்கிறது. முதலமைச்சர் காமராசர்—சென்னையிலே மரம் நட்டார். உள்ளூர் உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்கே இந்த திருப்பணியைச் செய்திருக்கின்றனர். நிலவளம் கொழிக்க நீர்வளம் வேண்டும், அந்த நீரைப் பொழியும் முகில்களை உண்டுபண்ண காடுகள் வேண்டும்; எனவே மரங்களை வளருங்கள் —என்றபடி முன்னைய உணவு அமைச்சர்—அரிசி உணவுக்குப்பதில் பருத்திக் கொட்டையைப் பருகச்சொன்ன பரோபகாரியாம்முன்ஷி நாடெங்கும் ஒலிபரப்பினர். வழக்கம்போல நேருப் பண்டிதரும், கதர்க் குல்லாய்க்காரர்களும் அதை தேசமெங்கும் எதிரொலித்தார்கள். "நாடு செழிக்க காடு வளருங்கள்" என்ற பேருபதேசம நம் காதுகளைத் துளைத்தன. அத்துணை வேகத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. வான மண்டலத்தில் சுதந்திரமாகத் திரியும் மேகக் கூட்டங்களை ஆகாய விமானத்தின் மூலம் பிடித்து வருகின்றனர் மேலை நாட்டார். அவர்கள் 'பெய்' என்கிறதும் பெய்கிறது மழை, பேரிடியுடன்! இருபதாம் நூற்றுண்டின் அந்த விஞ்ஞானப் பேரறிவு எங்கே? இந்த வனமகோத்சவ பத்தாம் பசலிப் பேரிருள் எங்கே என்று மாற்றுக் கட்சியினர் மூக்கிலே விரல் வைத்து வியந்தனர்; முன்ஷியின் செயல் கண்டு கொதித்தனர். இதையெல்லாம் பொருட்படுத்தினர்களில்லை, நமது காந்தி சீடர்கள்! அவ்வளவுஉத்வேகத்துடன் காடு வளர்க்கும் திட்டம் அமுல் நடத்தப்பட்டது.

இந்த நிலையிலேதான் திடுக்கிடும் செய்தியொன்று நம்மைத் தாக்கியது. கானகம் வளர்க்க காட்டுக் கூச்சல் எழுப்பிய கனவான்கள் ஒரு பக்கம் — மற்றொரு பக்கமோ காடழிக்கும் திட்டம். ஆமாம்! திடீரென்று கோவையிலே உள்ள காட்டு இலாக்கா கல்லூரியை — இதுகாறும் சென்னை அரசினரின் பாதுகாப்பிலே இருந்த அந்தக் கல்லூரியை மத்திய அரசாங்கத்தினர் பிடுங்கிக் கொண்டனர். அந்தக் கல்லூரியின் மணி முடியாக விளங்கிவந்த பயிற்சிக்குழுவை முன்னறிவிப்பின்றி மூடிவிட்டனர். சாறு பிழிந்த சக்கையாகி விட்டது கோவையின் காட்டு இலாக்கா கல்லூரி. வடவரின்பூமியிலே-இமாசலத்தின் அடிவாரத்திலேஅமர்ந்திருக்கும் டேராடூன் கல்லூரி பச்சைப் பசேரென செழிப் பெய்தியது. தென் புலத்தவரின் ஏகோபித்த எதிர்ப்பை ஏறெடுத்தும் பாராமல் டேராடூனிலே புதுப்புது கல்வி முறைகள்; இங்கேயுள்ள கோவையிலோ சில்லறை அலுவலாளர்களான "ரேன்ஜர்"கள் பயிற்சியைத் தவிர மற்றதெல்லாம் மூடப்பட்டன. ஆராய்ச்சிக்கூட மொன்றை நிறுவுங்கள் என்ற சென்னை அரசினரின் விண்ணப்பத்தைக் கூட மதித்தார்களில்லை டெல்லி மூலவர்கள். அவ்வளவு செல்வாக்கு சென்னை மாகாணத்திற்கு!

மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் நாம் கண்டனக் கணைகளைத் தொடுத்தோம். "அடுக்குமா இந்த செயல்? தடுக்க வேண்டாமா இந்த ஓரவஞ்சனையை" என்றெல்லாம் தேசியத் தோழர்களுக்கு எடுத்துச் சொன்னோம். "வடக்கு வாழ்ந்து கொண்டே போவதா? தெற்கு தாழ்ந்தபடியே இருப்பதா?" என்றெல்லாம், கேட்பவர் மனம் உருகும்படி கூறினோம். கேட்டார்களில்லை, வடநாட்டுத் துரைகள். இந்த நிலையிலேதான் சென்ற வாரம் தொடர்ந்து வனமகோத்சவம் நடைபெற்றிருக்கிறது. கனம் களெல்லாம் இதில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். நேருப் பண்டிதரைப் பார்த்து, பிரதமரே! நீதி நெறி வழுவாத அமைச்சர் பெருமகனே! உம்முடைய கண்களாம் டேராடூனில் வெண்ணையையும், கோவையில் சுண்ணம்பையும் வைக்கலாமா? இந்த மாற்றுந்தாய்க் கொள்கை நல்ல பண்பாகுமா?" என்று பண்டிதரின் புகழ் பாடுபடுபவர் யாரும் கேட்க முன் வரவில்லை. அதோடு நிறுத்திக் கொண்டார்களா அவர்கள்? வடவரின் சுரண்டலை கட்டோடு எதிர்க்கும் நம் மீதல்லவா கடிந்து விழுகிறார்கள்?

திராவிடநாடு கேட்பதை பேத்தல் என்பவர்கள், பித்தம் என்று காய்பவர்கள் இந்த மாற்றுந்தாய்க் கொள்கையைக் கவனிக்க வேண்டும். தனித் திருநாட்டின் கர்ம வீரராக வேண்டும்.அஃதன்றி தேசிய திருவாளர்கள் காடு வளர்க்கிறார்களாம், கோவையிலேயுள்ள காட்டு இலாக்கா கல்லூரியை மூடிவிட்டு! வடக்கே — விந்தியத்திற்கு அப்பால் மண்டிக் கிடக்கிறது காடு, அதிலே ஒண்டிக் கொண்டிருக்கும் காண்டா மிருகங்கள் தான் இங்கே மேய வருகின்றன; நம்மீது பாய வருகின்றன. இந்தக் கொடுமைக்கு சூட்டிய புதிய பெயர் தான் மரம் நடும் விழா. அவர்கள் பாணியிலே வனமகோத்சவம்!

தானுடா விட்டாலும் சதையாடிற்று!

[நாஞ்சில் கி. மனோகரன்]

திரு நாட்டின் சுடரொளியை அணைக்க; வின்பத்
திருநிலவை மறைக்க; நிலைதொலைக்க; வாழ்வின்
பெருவளத்தைத் தீய்க்க; பகுத்தறிவைச் சாய்க்கச்
சாதி நிலை நீடிக்கச் சகதியாக்க!
உருமாற்ற உயிர்நாட்டைக், கண்ணைக்குத்த
உருவாகும் உயர்நாட்டை உருக்குலைக்கத்
திருவாளன் குல்லூகப்பட்டர், சி. ஆர்.
திணித்திட்டார் குலதர்மக் கல்வித் திட்டம்!

மக்கள்குரல் பேசிற்று, கனலைக் கக்க!
மன்றங்கள் வீசிற்றே அனலைவாரி!
தக்கார்கள், கல்விவலார், கற்றோர், பெற்றோர்
தன்மானத் தீரரெலாம் வேண்டாம் என்றார்
சுக்கு நூறாக்கிடுக! சிதையிலேற்று,
சூழ்ச்சியிலே பூத்துவிட்ட திட்டம் என்று
எக்கட்சி செப்பவில்லை? எனினும் சி. ஆர்.
ஏனென்று கேட்டாரா? அவர் கேட்பானேன்?

துப்பாக்கிப் படைவரிசை! சட்டம், திட்டம்
தூளாக்கப் பீரங்கி, தடி, கோல் தாங்கச்
சிப்பாய்கள்! தூண்டிவிட வஞ்ச நெஞ்சம்
சிந்தனைக்குச் சாவோலை! விளக்கந்தன்னைத்
தப்பாக்க அனுமார்கள்! காட்டிக் கேட்க
ஜுடாஸ்கள்! கால் நீவிச் "சொர்க்கம்" சேர
அப்பாவிச் சமுதாயம், எனின் ஏன் அன்பர்
ஆச்சாரி, ஆணவத்தை அணைக்க மாட்டார்?

பாய்ந்துவிட்ட தமிழகத்தின் குருதிச் சேற்றில்,
பிளந்துவிட்ட செழுந்தமிழர் மண்டையோட்டில்,
சாய்ந்துவிட்ட வீரர்களின் பிணக்குன்றின்மேல்,
சதிராட்டம்! ஆச்சாரி பவனி வந்தார்!
ஓய்ந்ததுவா? தமிழ் நாடு உறுமிற்றிங்கே!
ஓங்காரப் பேரொலியாலாடிற்றன்றே!
சாய்ந்துவிட்டார் சாணக்கியர், பாழாய்ப்போனார்!
தூளாயிற்றவர் திட்டம்! ஒதுங்கலானார்.

தொல்லைதரு குல்லூகப் பட்டர் திட்டம்
தொலைந்ததடா! தோள்தட்டு! அமைச்சுமன்றில்
கொல்லைவழி வெட்கமிலாதுள்ளே வந்தார்,
கொண்டுவந்த திட்டத்தை வெளியே தள்ளி
அல்லொழித்து, ஒளிதூவி, மக்கள் தேவை
அரவணைத்தார், மக்கள் குரல் மதித்தார்; நச்சுப்
பல்லொழித்தார், பாராட்டு! விருதை வீரர்
தானுடா விட்டாலும் சதையாடிற்று!

தினத்தந்தி கார்ட்டூன்—ஒரு திருத்தம்



தினத்தந்தி 1—7—54ம் தேதிய இதழில் "தி. மு. க. தலைவர் அறிவை (வலதுபக்கம்) வளர்க்கிறார்" என்றதலைப்பில் போட்டிருந்த கேலிச் சித்திரத்தை பார்த்த நமது சித்திரக்காரர் அறிஞர் அண்ணா யாருக்கு அறிவை வளர்க்கிறார் என்பதை சட்டைக்கு நிறம் கொடுத்து (இடதுபக்கம்) சித்தரித்துக் காட்டியுள்ளார்.

Best copy available

ரஜ கட்டம் சிந்தும் ரத்தக் கண்ணீர்!

அன்புள்ள குமார்,

அடிக்கடி கடிதம் எழுதி தொல்லைகொடுக்கிறேனேஎன்று எண்ணுகிறாயா? தோழனே குமார், கடிதத்தை அவ்வளவு இலகுவானது என்று கருதிவிடாதே. நெஞ்சிலே பட்டதை அப்படியே அப்பட்டமாக எடுத்துச்சொல்வதற்கு ஏற்ற சாதனம் கடிதம் ஒன்றுதான் என்பதை மறந்துவிடாதே.

இலக்கியமானாலும், வரலாறுகளானாலும், அவைகளில் வரும் சுவைமிக்க நிகழ்ச்சிகளை ஒன்றுக்கொன்று தொடர்பு படுத்தி ஜீவனுண்டு பண்ணக் கூடியது கடிதம்தான் என்பதை நீ அறிவாய். புரட்சி இலக்கியமானாலும், புழுத்துப்போன புராணக் குப்பையானாலும் ஓலை குறுக்கிடாத காதல் இல்லாமல் இருக்க முடியாது. அன்பு நண்ப, ஏன் நான் இதை யெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், கடிதங்களை உனக்கு தொடர்ந்து எழுத வேண்டிய நிலை அரசியலில் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை அறிவுறுத்தத்தான்.

சென்ற வாரம் "யார் அந்த மாபாவிகள்?" என்று கேட்டிருந்தேன். இதுவரை உன்னிடமிருந்து அதற்குப் பதில் வரக்காணோம். மௌனம் ஒப்புதலுக்கு அறிகுறி என்பார்கள். அதை நினைத்துத்தான் நான் அடுத்த கடிதத்தை தீட்டமுனைந்தேன்.

சென்ற வாரச் செய்தித்தாளில் ஒரு முக்கியமானசெய்தி என் மனதைக் கவ்வியது. இனி வரும் தேர்தல்களில், பிரச்சாரத் துண்டிகளிலும், சுவரொட்டிகளிலும் காந்தியாரின படத்தை உபயோகப்படுத்தக் கூடாதென காங்கிரஸ் மேலிடம் கட்டளையிடத்தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. உன் கண்ணிலும் இச்செய்தி பட்டிருக்கும். வீட்டிலே சமைப்பதை உண்டுவிட்டு வீதியிலே இருக்கும் தேநீர் கடைகளிலே அரசியல் விவாதம் செய்வதையே அன்றாட வேலையாகக் கொண்டிருக்கும் உனக்கும் இச்செய்தி தப்பியிருக்காதல்லவா!

இந்தச் செய்தியைப் படித்ததும் நீ எண்ணியிருப்பாய், "காங்கிரஸ் புனிதத்தன்மை அடைந்திருக்கிறது; எனவேதான் காந்தியின் பெயரால் ஓட்டுக் கேட்கக்கூடாது என்று காங்கிரஸ் தலைமை பீடம் தீர்மானித்துவிட்டது!" என்று. அது உண்மையென்று நீ கருதுகிறாய்? ...ர மன்ற உறுப்பினர் தேர்தலிலிருந்து, நாடாளும் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல்வரை இதுகாறும் நின்ற காங்கிரஸ் கோமான்கள் காந்தியாரின் பெயரில் ஓட்டுக் கேட்கவில்லையா? காந்தியாரின் ஆவி புகை மண்டலத்தை ஊடுருவிச் செல்வதைப்போல வர்ணஜாலக் காகிதத்தில் அச்சிட்டு ஊரெங்கும் தூவி 'எங்களை ஆதரியுங்கள்—உங்களைக் காப்பாற்றுகிறோம்' என்று வாய்வலிக்க கத்தியவர்கள் தானே இந்த காங்கிரஸ் ஆளவந்தார்கள்! இப்போது மட்டும் இந்தப் புது ஞானம் பிறந்திருக்கிறதே ஏன்? "தேர்தலிலே வாக்களியுங்கள் எங்களுக்கு! தங்களுக்குத் தேவையானதைக் செய்து முடிக்கிறோம்—ஆனால்எங்களிடம் உறுதி கேட்காதீர்கள்" என்று சொல்வதைப் போலல்லவா இருக்கிறது காங்கிரஸ் மேலிடத்தின் இந்தத் திடீர்முடிவு. பிரிய நண்பா, காந்தியாரின் பெயரைச் சொல்லி—காந்தியாரின் படத்தைக் காட்டி பொதுமக்களின் உள்ளங்களை வசப்படுத்தி ஓட்டு வாங்கிய காலம் இன்னும் நிலைத்து நிற்கிறதென்று நீ நினைக்கிறாய்? "காங்கிரசின் பெயரால் ஒருகல்லை நிறுத்தினாலும் போதும் — வெற்றி கிடைத்துவிடும்" என்று எண்ணி எளிதிலே வாகை சூடியகாலம் ஒன்றிருந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது. காங்கிரஸ் கட்சியின் பெயரைச் சொல்லி வெற்றி பெற்றகாலம் இனியும் ஒருமுறை வருமென்று கனவிலே கூட கருத முடியாத அளவுக்கு மக்கள் உள்ளம் பண்பட்டுவிட்டது, நண்பனே. கைமேல் பலனைத்தான் பொதுமக்கள் இப்போது எதிர்பார்க்கிறார்கள். 'பொறுத்திருங்கள் புதையல் கிளம்பப் போகிறது' என்ற ஆசை வார்த்தைகளைக் கேட்டு சலிப்படைந்து விட்டவர்கள் இந்த நாட்டுமக்கள். 'ஆரண்யம் அழகு மாளிகையாகப் போகிறது; வற்றாத ஜீவநதிகளை உண்டாக்கி, வயல்களை வளம்குன்றா வைர பூமியாக்கப் போகிறோம்—ஆனால் ஐந்தாண்டு பொறுத்திருங்கள்" என்று சொன்னார்கள். அந்த ஐந்தாண்டு காலத்தில் நிலவிய 'சுபிட்ச'த்தை அந்தந்த ஊர் புதைகுழிகளை தோண்டிப் பார்த்தால்தான் சொல்லமுடியும். உன்னுடைய தலைவர்கள் அந்த ஐந்தாண்டோடு நின்று விடவில்லை. மற்றொரு ஐந்தாண்டு காத்திருங்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

அதுமட்டுமல்ல குமார், சென்னை மாநில மராமத்து இலாகா அமைச்சர் "அடுத்தஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றி கண்டு காங்கிரசின் எதிர்ப்பாளர்கள் வெட்கித் தலைகுனிவார்கள்" என்கிறார். ஆனால் மறுநாள் ஓர் இடத்தில் சிந்தாமணி தேஷ்முக் "அடுத்துவரும் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இப்போது பேசுவது நல்ல செயலல்ல" என்கிறார் இதில் எதைத்தான் நாம் நம்புவது? இதையெல்லாம் கண்டு மக்கள் மனம் பற்றி எரியாது என்னசெய்யும்?

காந்தியாரின் படத்தை தேர்தல் விளம்பரங்களில் உபயோகிக்கக் கூடாது என்ற முடிவு எனக்கு எத்தனை குழப்பங்களை மூட்டி விட்டிருக்கிறது தெரியுமா? இந்த முடிவு, நாங்கள் எதையும் செய்வோம் – அதற்கு காந்தியாரைப் பொறுப்பாளியாக்கமாட்டோம் என்பதற்காகவா, அல்லது காந்தியாருக்கு மரியாதை காட்டுகிறோம் என்ற வெளிவேடமா? என்று என்னால் சரியாகக் கணித்துக் கூற முடியவில்லை.

காந்தியார் தன்னுடைய வாழ்நாளின் கடைசிநேரத்தில் – துப்பாக்கிக் குண்டுகள் கொஞ்சங் கொஞ்சமாக உயிரைக் குடித்துக் கொண்டிருந்த வேளையில் சொன்னாரே, "காங்கிரசைக் கலைத்துவிடுங்கள்" என்று. ஏன் சொல்லவேண்டும் அவ்வாறு? தனக்குப்பின் காங்கிரஸ் வாழக்கூடாது என்ற துர் எண்ணமா? அல்ல தோழனே, அல்ல! காங்கிரசின் கட்டுப்பாடு அழிந்துவிடும் — தூய்மையான அந்த மகாசபைக்கு மாசு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான். இப்போது என்னவாயிற்று காங்கிரஸ்? குமார், கடுமையாக எழுதுகிறேன் என்று கோபப்படாதே! வேற்றாரும் மற்றவரும் மலர் சொரிந்து மௌனக் கோலத்தில் வேண்டிநிற்கிறார்களே ராஜகட் — காந்தியாரின் கல்லறை —சத்புத்ரனின் சமாதி அங்குபோய் பார் அதன் மீது படிந்திருக்கும் நீர்த்துளிகளை! பனி மலையாம் இமயத்தின் சாரல் சிந்தும் திவலைகளல்ல அவைகள்! ரத்தக்கண்ணீர் குமார், ரத்தக் கண்ணீர்! ஆனால் ஒன்றை மட்டும் உனக்கு முன்கூட்டியே அறிவித்து விடுகிறேன். காங்கிரஸ் நோய்கண்டு மரணப் படுக்கை ஏகிவிட்டது. இனி மேற்கொண்டு எழுந்து நடமாடுவது என்பது இயலாத காரியம். இதை நீ மறுப்பதாயின் எனக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். மறந்து விடாதே. அடுத்தமுறை சந்திக்கிறேன்

அன்புள்ள

பொன்முடி

சித்தூர் மாவட்ட தி. மு. கழக மாநாடுகள்

ஜூலை 10, 11 தேதிகளில் பொதட்டூர்பேட்டையில் நடைபெறும்

சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் : அ. பொன்னம்பலனார்	தலைவர் : ஏ. எல். சி. கிருட்டணசாமி
திறப்பாளர் : நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி	திறப்பாளர் : இராம. அரங்கண்ணல்

10-7-54 சனிக்கிழமை இரவு
புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்
அவர் தம் குழுவினருடன் நடிக்கும்
இன்பக்கனவு

11-7-54 ஞாயிறு இரவு
நடிப்புக் கலைஞர் எஸ். எஸ். இராசேந்திரன்
அவர் தம் குழுவினருடன் நடிக்கும்
சந்திர மோகன்

வரவேற்புக்குழுத்தலைவர் :—ஏ. டி. கே. இராமசாமி.
தொண்டர் படைத் தலைவர் :—ஈ. என். கோதண்டபாணி
செயலாளர்கள்:-என். கே. எஸ். கணேசன், எல். கேசவன்

Filmed as bound

கலைத்தோட்டம்

சீனத்துக் கவிஞன்!

புதுமையும் பொலிவும் பெற்றுத் திகழும் புது நாடு!

புல்லர்களின் கொட்டம் அழித்த பொதுநலப் பூங்கா!

இப்படி உலகம்—ஆசியாவின் தென் கிழக்குக் கோடியை நிரப்பிக் கொண்டிருக்கும் செஞ்சீனத்தை வாழ்த்துகிறது—அதன் வளம் கண்டு பூரிக்கிறது—பொருமையும் அடைகிறது.

நாற்பத்தாறு கோடி சீனர்களின் கனவு — 'புதுவாழ்வும் பெருநலமும் பெற்று நல்லதோர் நாட்டில் வாழ்வோமா?' என்ற பெருங்கனவு நனவாகி வருகிறது இன்றைய செஞ்சீனத்தில்!

ஆனால், இதே கனவை, இன்றல்ல; நேற்றல்ல—பத்தாண்டுகளுக்கு முன்பல்ல, நூறாண்டுகளுக்கு முன்புமல்ல—இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே ஓர் உள்ளம் கண்டது. சீனத்தின் எதிர்காலத்தை—சிறந்ததோர் நாட்டின் சிறப்பியல்புகளுடன் கனவு கண்டது. நெஞ்சகத்தில் நடமாடிய அந்த தங்க எண்ணங்களை எழுத்துக்களிலே வடித்தது; சுரவியமாக பாடிக் களித்தது.

அந்தக் கனவுப் பாடகன்—சீனத்து முதுக் கவிஞன்—இன்று சீனநாடு போற்றிப் புகழும் பெருமையாளர்களில் ஒருவன். சு யுன் என்பான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகத்தில் நாகரிகம் அவ்வளவாகத் தலையெடுக்காதகாலம். அந்த நேரத்தில் இப்படி ஒரு காவியப் பேரசன் தோன்றியிருக்க முடியுமா என்ற சந்தேகம் எவருக்கும் எழலாம்.

சந்தேகம் தோன்றத்தான் செய்யும்—இருந்தாலும் அப்படி ஒரு கவிஞனும் தோன்றத்தான் செய்திருக்கிறன் — அதனுல் தான் இன்றையஉலகம் அவனது புலமைக்குப்பெருமை தருகிறது.

தூய்மையும் பொறுமையும் நற்பண்புகளுக்கோர் கலசம் — சர்வாதிகாரமும் 'தான்' என்ற அகம்பாவமும் சாக்காட்டிற்கோர் பாதை—இத்தகு உயர்ந்த கருத்துக்கள்தான் அவனது காவியங்களிலே பளிச்சிடுகின்றன.

கவி இயற்றும் நற்பண்பை இயற்பண்பாகப் பெற்றிருந்த சு யான், இயற்கை வனப்புகள் ஏராளமாக இருக்க — காதல் காவியங்கள் பலப்பல இருக்க — அவை அனைத்தையும் விடுத்து, தனிச் சிறந்த நாட்டின் நல்லிலச்சணத்தைக் கருதுவானேன்? பண்பட்ட அரசியலைப் பாடிக் காட்டுவானேன்? இந்தக் கேள்வி நம்மிடையே பலருக்கு—இராமக் காதையிலும் பாரதப் பெருங் கதையிலும் பழகிப் போன அநேகருக்கு எழலாம்.

ஆனுல் சு யானின் கவிதைகள் போர்க்களத்தின் பெரும் நாசத்திலே—பிணவாடையிலே—இரத்தச் சகதியிலே பிறந்தவை.

இன்றைய சிகப்புசீனு அன்று உருக்குலைந்திருந்த நேரம். ஒன்றை ஒன்று விழுங்கி ஏப்பமிடக் காத்திருக்கும் ஏழு சிற்றரசுகள். அவைகளிடையே ஓயாத பிணக்கு-ஓழியாத யுத்தம். அந்தப் பயங்கரச் சூழ்நிலையில் அமைதிக்கு இடமேது? கருணைக்கு வாய்ப்பேது? சதிக்குப் பயன்பட்ட சமுதாயத் தத்துவங்கள் — அக்ரமத்துக்கு திரையிட்டிருந்த அரசியல் பிரளயங்கள் -- இவைகளுக்கு மத்தியிலேதான் அந்தக் கவிஞனின் குரல் கேட்டது. மக்களின் நம்பிக்கையை நசுக்கிக்கொண்டிருந்த சுய நல சிற்றரசர்களை எதிர்த்தது; சஞ்சலத்தை தூபமிட்டுக் காத்த அரண்மனைச் சதிகளை அலசியது; நாட்டை இடுகாடாக்கி வந்த இச்சகத்தை, வஞ்சகத்தை, முரட்டுத்தனத்தை, அனைத்தையும் எழுத்துக்கு எழுத்து, வரிக்கு வரி தாக்கியது;

தூற்றியது; கண்டித்தது! "பெருநாடா? அல்லதுசுடுகாடா?" என்று மண்ணுசை கொண்ட மன்னர் சிகாமணிகள் —"வாழ்வா? அல்லது சாவா?" என்ற உயிர் பிரச்னையில் சிக்கித் தவித்த மக்கள் கூட்டம் — இவர்களுக்கு மத்தியிலே "வன் மதி கொண்டோரே! வாழப் பிறந்தோரை 'விளையாட்'டுக்குச் சாக அடிக்கும் வஞ்சக நெஞ்சத்தோரே! வீழ்ச்சிக்கு வித்திடுவது ஆட்சியல்ல — மாட்சியல்ல! இதோ 'நல்லாட்சி'யின் இலக்கணம் காணீர்!" என்று ஆளும் முறையை பாடிக்காட்டினுர் சு யான் அடுக்கடுக்கான வார்த்தை வர்ணனைகளோடு.

சு யானின் கவிதைகளிலே சீனப்பேரறிஞன் கன்பூஷியஸின் கருத்துக்கள் படர்ந்திருக்கின்றன. கன்பூஷியஸைப் பின்பற்றிதான் அவர் அறிவுப் பணி செய்திருக்கிறுர். ஆனுல் அறிவுப் பணிக்கு — ஆற்றல் மிக்க புதுமைப் பிரசாரத்திற்கு என்றுமே உலகம் — அதுவும் உணுத்த எண்ணங்களைப் புடமிட்டுக் காத்த உன்மத்த மன்னர் உலகம் மதிப்பு தந்ததில்லை; ஆனுல் ஒழிக்கவும் தயங்கியதில்லை. சு யான் மட்டும் அதற்கு விதி விலக்காகிவிட முடியுமா? நேர்மை மறந்த நெஞ்சம் கொண்ட 'நீதி தேவர்கள்' அவரை மட்டும் விட்டு விடுவார்களா? அவர்களது வஞ்சகப்பார்வையில் சு யானும் சிக்கத்தான் செய்தார் — அதன் விளைவாக நாடு கடத்தப் பட்டார்.

தாயகத்தின் மண்ணை மதிக்காமல் — பெற்ற நாட்டின் காற்றை நுகராமல் இருபது ஆண்டுகள் அவர் திரிந்தார். நாசமதி கொண்டோரின் கோர நர்த்தனத்தால் பிறந்த பொன்னுடு சீரழிந்து வரும் நிலை கண்டு மனம் நொந்தார்; வேதனை ஏற்றுர்; அமைதி —

நாடி ஓடினுர்! ஓடிக் கொண்டிருந்த அந்த உத்தம புத்திரனை உலகம் ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆனுல் 'வாவா' என்று கை காட்டி அழைத்தது மைலோ எனும் நதி. மரணத்தை அணைந்தார் அந்த மகாகவி அந்நீர் மாதாவின் மடியிலே. ஆனுல் அணையாத அவரது எழுத்தோவியங்கள் அழியா சித்திரங்களாகி விட்டன!

உலகத்தின் மிகப் பெரிய வல்லரசு நாடுகளுடன் சரியாசனம் வகிக்க துடிக்கிறது இன்றைய செஞ்சீனு. ஆனுல் அதனுடைய இத்தகு வளர்ச்சிக்கு சு யானைப் போன்ற சீனத்து சிற்பிகளின் கனவும் ஒரு வழிதான்; இதை மறக்காத சீனப் பெருநாடு அவருக்கு நன்றி செலுத்தி வருகிறது; வாழ்க அவரது வற்றுத புகழ்!

★

சங்கும் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறது. இந்த ஆத்திபய சக்கரத்திற்கு புனிதமான பெயர் அசோக சக்கரம்—சங்கறுக்கும் சக்கரம் வடவர் கையில் இருக்கும் வரை, சங்கம் அமைத்து வாழ்ந்த இந்த தரணியின் சுதந்திரம், எத்தர்களின் காலில் மிதிபட்டுச் சீரழிந்து தான் போகும். சங்கு விளைகிறது நமது கடலில்! சக்கரம் அறுக்கிறது—அது அவர்களது கையில்!—

இந்த வேறு பாட்டுக்கு ஒரு நல்ல முடிவே கிடையாதா! சிந்தியுங்கள் தோழர்களே!

எழுத்தாளரும் 'எத்தாளரும்!'

○

எம். ஜி. எம் படக் கம்பெனிக்காரர்கள் சினிமா உலகச் சக்கரவர்த்திகள். ஏனைய வியாபாரிகளைப் போலபணத்துக்கு ஆசைப்பட்டு—கௌரவத்தை இழந்து குறுக்கு வழி ஏக மாட்டார்கள்—குள்ள நரிச் செயல் புரிய மாட்டார்கள். காரணம் அவர்கள்சினிமாத் தொழிலைஒரு "பிசினசாக" நினைக்காமல் அதை ஒரு மாபெருங் கலையாக நினைக்கும் கண்யவான்கள். இப்படி இருந்தும் சமீபத்தில் அவர்கள் தவறி விட்டார்கள். ஒரு சிறு தவறு அவர்களை சட்டமன்றத்தின்முன் கொண்டு நிறுத்திவிட்டது.

எம். ஜி. எம் காரர்கள் ஹங்கேரி நாடகாசிரியர் ஒருவர் எழுதியநாடகத்தை படமெடுக்க முடிவு செய்தார்கள். அந்த நாடகாசிரியரோ சாதாரண கதை புனைபவர் மட்டுமல்ல; சொந்த நாட்டின் சரித்திரத்தையே மாற்றி எழுதும் பணியிலும் ஈடுபட்டிருந்தார். எனவே தான் நாஜிகளால் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டார். எழுத்தாளன் காராக்கிரகத்திலே வாடியபோது—படக் கம்பெனிக்காரர்கள் அவன் அனுமதியின்றி அந்தக் கதையின் பெயரை மட்டும் மாற்றிவிட்டார்கள். சினிமாக்காரர்கள் கண்களுக்கு அதுஒருசிறியமாற்றம்தான்; ஆனுல் தன் காவியத்தின் ஜீவனே பறி போய்விட்டதாக அந்த நாடகாசிரியர் கொதித்துக் கிளம்பினுர். பேனு முனைக்கும் பண மூட்டைக்கும் போர் மூண்டது. சர்வாதிகார சரசத்திலே லயித்துக் கிடந்த கொடுங்கோல்களை எழுதுகோல் முன்னே சரணடைந்தபோது இந்த சினிமாக்கம்பெனிஎம்மாத்திரம்? சிறைச் சாலையிலிருந்து விடுதலையடைந்த நாடகாசிரியர் 2-லட்சம் டாலருக்கு வழக்கு தொடர்ந்தார. எம். ஜி. எம். காரர்கள் இப்போது சமாதனத்துக்கு வந்து விட்டார்களாம்! ஆமாம்! அறம் வென்றது, மனிதாபிமானம் வாகை சூடியது. பண்பட்ட எழுத்தாளருக்கு பாதை காட்டி, எத்திப் பிழைக்கும் சூதர் கோட்டத்துக்கு தீ வைத்த அந்த நாடகாசிரியர் நம் நினைவுக்குறியவர்.

[எம். கே.]

தஞ்சை மாவட்டத்து சுற்றுப் பயணம் ஜூன் 8-ம் நாளுடன் முடிந்துவிட்டது. 9-ம் நாள் சென்னை வந்து, ஒருநாள் ஓய்வு பெற்று, மறுநாள் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சிறு மதுரை என்னும் சிற்றூரில்நடைபெறும் தி. மு. கழகப் பொதுக் கூட்டத்திற்குப் புறப்பட்டேன். நண்பர் என். வி. நடராசன் அவர்களும், நண்பர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்களும் தங்களின் சுற்றுப் பயணத்தின் இடையே சிறுமதுரை வந்திருந்தார்கள். நல்லமழை. இரவு 9-மணி வரை கூட்டம் ஆரம்பிக்க முடியவில்லை.

வெளியூரிலிருந்து வந்திருந்த மக்கள் அனைவரும் தங்கிடுவதற்கு வசதியான ஊருமில்லை அது. 9–மணிக்கு மழை விட்ட பிறகு கூட்டத்தை ஆரம்பித்தோம். அந்த இரவில் ஈரமான தரையில் சேற்றிலே காலைப் புதைத்துக் கொண்டும் கூட ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தார்கள் என்றால் தெ. ஆ. மாவட்டத்திலே தி. மு. கழகத்திற்கு எத்துணை செல்வாக்கு வளர்ந்திருக்கிறது என்பதை சொல்லவும் வேண்டுமோ! வன்னியர்குலத்து மக்கள் எல்லாம் தன் பக்கமிருக்கிறார்கள்; தன்னை மந்திரியாக்கி மாலைசூட்டுவதுதான் அவர்களுக்கு வேலை என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் வன்னியர் குலத்துத் தலைவர்கள் சிலர் தலை குனியும் அளவுக்கு சிறு மதுரை கூட்டம் அமைந்திருந்தது.

தோழர்கள் கோவிந்தசாமி, என். வி. என், இருவருமே சொன்னார்கள் — தென்னாற்காடு மாவட்டத்தில் தாங்கள் சென்று பேசிய இடங்களில் எல்லாம் வன்னிய மக்களும், ஏனைய மக்களும் துரோகிகளுக்குப் புத்தி புகட்டத் தயாராக இருக்கிறார்கள் என்ற செய்தியை! புது மந்திரிகள் சிலர் — நிலையிலே தான் "கனம்" என நாம் எண்ணினோம் — அவர்களோ இல்லை—இல்லை—தலையில் தான்-என்று பதில் கூறுகிறார்கள், என்ற விதத்திலே தென்னாற்காட்டு மக்கள் வேடிக்கையாகப் பேசிக் கொண்டதும், எங்கள் காதில் விழத்தான் செய்தது! இரவு 12-மணிக்கு சிறுமதுரையை விட்டுப் புறப்பட்டு விடியற்காலை திருச்சி அடைந்தேன். திருச்சியிலிருந்து தோழர்கள் ராங்குசம், மயூரானந்தன், தஞ்சை சண்முக வடிவேல், 'முரசொலி'—மாறன் ஆகியோருடன் மதுரை சென்றேன்.

11-ந்தேதி காலையிலே மதுரையில் ஒரு திருமணம். தோழர் பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் சொற்பொழிவாற்றினார். தோழியர் மீரா–சுப்பு என்ற அம்மையார்களின் வீட்டிலே நடைபெற்ற அத் திருமண விழாவிலும், பெயர் சூட்டு விழாவிலும் நானும் கலந்து பேசிவிட்டு, மதுரை முத்து அவர்களுடன் மொத்தம் ஆறு பேரும் நாகர்கோயில் நோக்கிப் பயணமானோம். எங்கள் ஆறு பேரையும் தாங்கிக்கொண்டு அந்தச் சிறிய கார்—நாஞ்சில் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அதனுடைய சிரமத்தை வாய் திறந்து கூற முடியாவிட்டாலும், செய்கை மூலமாகக் காட்டிக் கொண்டே வந்தது. அப்போது நான் நினைத்துக்கொண்டேன்; அழுத்தப்பட்டு மிதிபட்டு நசுங்கியும் கூட, வாய் திறக்க முடியாமல்—எதிர்த்து நிற்கமுடியாமல்—ஏங்கித் தவிக்கும் பாட்டாளி சமூகத்தைவிட, இந்த உயிரற்ற கார் எவ்வளவோ மேல்—தன் உரிமைக்காகப் போராடுகிறது - என்பதாக! விருதுநகரில் ஒரு சிற்றுண்டிச்சாலையில் பிற்பகல் வயிற்றுப் புரட்சியை அடக்கிக் கொண்டோம். பின்னர் மாலை சுமார் ஆறு மணிக்கு நாஞ்சில் விளிம்பைத் தொடுவதற்கு முன்பாக, நாங்குனேரிப் பகுதியில் நாங்கள் கண்ட ஒரு காட்சியை உங்களிடம் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஒரு காட்சியல்ல நண்பர்களே— இரண்டு காட்சிகள் முதல் காட்சி சாதாரணமானது எங்கும் நடக்கக் கூடியது. இரண்டாம் காட்சி நம் நாட்டில் மட்டும் சகஜமாகி விட்டது. இந்தச் சமுதாயம் வாழும் இடத்தைத் தவிர வேறெங்கும் அவ்வளவு சுலபமாக அனுமதிக்கப்படாதது. அத்தகைய இரண்டு காட்சிகளை நாங்கள் கண்டோம்.

தி. மு. கழகம் — தற்கால சென்னை அரசைப் பற்றி என்ன கருதுகிறது? ஏன் திராவிட நாடு கோருகிறது? என்பதற்கு முதல் காட்சி ஒரு உதாரணமாகவும், தி. மு. கழகத்தின் ஆரிய—திராவிடக் கொள்கைக்கு அரியதோர் விளக்கம் —இரண்டாவது காட்சியாகவும் அமைந்திருந்தது. அப்படிப்பட்ட காட்சிகள் என்ன என்று அறியத் துடிக்கிறீர்கள் அல்லவா? — சொல்லுகிறேன் அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

[தொடரும்]

நீலா நிலையம்

★

21–6–54 அன்று காலை9–30 மணிக்கு சேலம் செரிரோட்டில் "நீலா நிலையத்தை" — (புத்தக வெளியீட்டு நிலயம்)—தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். ஆரப்ப விழாவிற்கு ஏராளமான நண்பர்களும் ஆதரவாளர்களும் வந்திருந்தனர்.

முரசொலி

ஆண்டு சந்தா ரூ. 6–0–0
ஆறு மாத சந்தா ரூ. 3–8–0

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தனி நாடு

திராவிடர் வார இதழ்

ஆசிரியர்: வெற்றிவீரன்

ஜூலை 15 முதல் வெளிவருகிறது

தனிப்பிரதி **2** அணா

ஆண்டு சந்தா ரூ. **6.**

பிரதி ஒன்றுக்கு 8 அணா வீதம் முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் எங்கும் தேவை

— விபரங்களுக்கு —

"தனி நாடு" அலுவலகம்

23, நரசிங்கபுரம் தெரு,

சென்னை-2.

உழவர் கட்சி உதயம்

திண்டிவனம் ஜூலை — 6

கடந்த 4ந்தேதி திண்டிவனத்தில் நடைபெற்ற தென்னாற்காடு மாவட்ட வன்னியகுல முக்கியஸ்தர்களின் கூட்டத்தில் 'உழவர் கட்சி' என்ற பெயரால் புதியதோர் கட்சி தோற்றுவிக்கப் பட்டது. இக்கட்சி வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரசையும், அதோடு இணைந்துள்ள உழைப்பாளர் கட்சியையும் எதிர்த்துப் போட்டியிடும்.

தன்னுடைய கட்சி ஜில்லா போர்டு தேர்தலில் கலந்து கொள்ளாது என ரெவின்யூ அமைச்சர் மாணிக்கவேலர் சொன்னார்—அதை விளக்கும் சித்திரம் இது.

பி. மலையான்—சென்னை.

(?) மாடர்ன் தியேட்டர்சார் தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் ஒரு சமூகப் படத்திற்கு தேவையான வசனங்களை மு. கருணாநிதியின் ரத்தக் கண்ணீர் அல்லது அம்மையப்பன் என்ற புத்தகத்திலிருந்து எடுத்து, கருணாநிதியின் அனுமதியில்லாமலே கையாண்டதாகவும், சுற்றுப் பயணம் முடிந்துவந்து சேதி தெரிந்த கருணாநிதி அத் தியேட்டர்சாரிடம் எவ்வளவோ எடுத்துக் கூறியும், அந்த செய்கையை அவர்கள் கைவிட மறுத்ததால் தோழர் கருணாநிதி மாடர்ன் தியேட்டரை விட்டு வெளியேறிவிட்டதாகவும், அவரைத் தொடர்ந்து சிவாஜி கணேசனும் மாடர்ன் தியேட்டரின் அந்த சமூகப் படத்தில் நடிக்க மறுத்து விட்டதாகவும் கூறப்படும் செய்திகள் உண்மை தானா?

எப்படித்தான் இந்த சேதிகளெல்லாம் உங்கள் காதில் விழுகிறதோ — தெரியவில்லை அப்பா!

சினிமாபித்தன்—சென்னை

(?) ரத்தக்கண்ணீர் என்ற புத்தகம் தான் அம்மையப்பன் என்பது உண்மைதானா?

உண்மைதான் — அதில் சந்தேகமென்ன? இன்னும் விளக்கம் வேண்டுமா? — ஆங்கிலக் கதையொன்றைத்தழுவி தோழர் கருணாநிதி சிறையில் எழுதிய நூல்தான் ரத்தக் கண்ணீர் — அதுதான் ராஜேந்திரன் நடிக்கும் அம்மையப்பன் நாடகமும் — திரைப்படமும்!

என். சம்பந்தம்—சென்னை.

(?) ஒரே கேள்வி! பதில் சொல்லும்; சுகம் எங்கே?

சுகமா? — எங்கே யென்று கேட்கிறீர் — தற்காலிகமாக அது, சூதர்களின் கூடாரத்திலே — சூன்யக்காரர்களின் பங்களாக்களிலே—சுந்தர வாழ்வு நடத்தி நன்றியை அந்தரத்தில் பறக்க விடும் சண்டாளர்களின் அரண்மனைகளிலே — திறமையற்றுப் போய் திருடித்தான் பிழைக்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டவர்களின் வீடுகளிலே!— தோழரே உமது கேள்விக்குப் பதிலே இன்னும் நீளமாகச்சொல்லலாம் — பயமாயிருக்கிறது — யாராவது பட முதலாளிகள் இந்த பதிலேயே வசனமாகமாற்றி விடுவார்களோ என்று!

டி. செந்தாமரை-கடலூர் என். டி.

(?) ராஜாஜி, நேதாஜி, நேருஜி— இவைகளில் எந்த "ஜீ" பெரியது?

எதுவுமில்லை — ஏழையின் பசியை அடக்கும் "பஜ்ஜீ" தான் பெரியது.

(?) திருக்குறள்—பைபிள் — குர்ரான்—கீதை, இவைகளைப் பற்றி உமது கருத்தென்ன?

பைபிள் குர்ரானைப்பற்றி பிறகு பேசுவோம் — திருக்குறளும் கீதையும் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளும் நூல்கள்— அவைகளில் குறள், நமது குரல்.

தமிழ்ப்பித்தன்—ரேணுகோண்டா.

(?) இந்தியாவில் கம்யூனிசம் இடத்திற்கு இடம் மாறுபடுவதாக உணருகிறேன்; தங்கள் கருத்தென்ன?

தவறு! தவறு!! மாறுபடாது தோழரே மாறுபடாது—இடத்திற்கு இடம் முரண்படுமேதவிர மாறுபடாது!

நண்பன்—திண்டிவனம்.

(?) திராவிட நாடு—ஐ. நா. சபைக்கு போவதால் கிடைத்து விடுமா? — சட்ட சபையைக் கைப்பற்றுவதால் கிடைத்து விடுமா? நாடகம்—சினிமா எழுதுவதால் அந்த கொள்கையை பரப்பிவிட முடியுமா? மாநாடுகள் நடத்துவதால் திராவிடம் பெறறுவிட முடியுமா? என்றெல்லாம் கேட்கிறார்களே அதற்கு உமது பதில் என்ன?

எதிலும் கிடைக்காது திராவிட நாடு! — முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதாலும், மூட்டையைக் குத்திக் கிளறுவதாலும் மட்டுமே திராவிடநாடு கிடைக்கும் என்று அந்த வீரர்களிடம் கூறு நண்பனே!

(?) காங்கிரஸ் மகாசபை தென்னாட்டில் நடைபெறப் போவதாகச் சொல்லப்படும் இடங்கள் அடிக்கடி மாறுதலடைகிறதே; கடைசியாக எந்த இடம் தீர்மானமாகும்?

கும்பகோணம் தீர்மானமாகலாம்—ஏனெனில் மாசி மகத்துக்கு வருகிற ஜனக்கூட்டத்தை வைத்துக் கொண்டு மகாநாடு நடத்திவிடலாம் என்று ஒருவர் யோசனை கூறியிருப்பதாகக் கேள்வி.

இந்திரஜித்—ஏழுக்கிணறு

(?) ட்ராம் கம்பெனியை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக உலவும் வதந்தி உண்மை தானா?

புதைந்து போன ட்ராம் தண்டவாளங்கள் 'புது வாழ்வு' பெற்றால்தான் நிச்சயம்.

(?) திருத்தணிப் பிள்ளையாரின் அரசியல் வாழ்வு எப்படி?

மஞ்சளில் பிடித்து வைக்கப் பட்டு—இப்போது மாட்டு சாணத்தில் பிடித்து வைக்கப் பட்டிருக்கிறது — அருகம்புல் சொருகாவிட்டால் விரைவில் உளுத்துப் போய்விடும்; அவ்வளவுதான்!

மாதவன் - உதகமண்டலம்.

(?) முதன் மந்திரி பதவியிலிருந்து விலகிய ஆச்சாரியார் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

சட்டசபையை பஜனை மடமாக ஆக்க முடியாத காரணத்தால்—வானொலி நிலையத்தில் அந்த 'கைங்கர்ய'த்தை செய்யப் புறப்பட்டிருக்கிறார்.

கே. ஏ. அருள்—மணிநகர் ஆமதாபாத்

(?) தி. மு. க. என்றால் திராவிட முதலியார்கள் கழகம் என்பது உண்மையா?

ஐ. மு. என்றால்—ஐயர், முதலியார் கட்சியா?

ஐ. நா. சபை என்றால் ஐயர் நாடார் சபையா?

●

நம்புவது எப்படியோ?

"ஆண்டவனைப் பாதுகாப்பதற்கு மதம் என்னும் அகழியும், மதத்தைப் பாதுகாப்பதற்கு புராண இதிகாசங்கள் என்னும் மதிற்சுவரும் சுற்றி அமைக்கப் பட்டிருப்பதைமக்கள் அறியவும் அதைப்பற்றி ஆராயவும் தொடங்கி விட்டால்—எங்களையும் பிற உயிர்களையும் படைத்துக் காத்து இரட்சிப்பதாகச் சொல்லப்படும் ஆண்டவனுக்கு இத்துணைப் பாதுகாப்புகள் எதற்காக? எங்களைப் படைத்த ஆண்டவனை நாங்களே அறியும்படி செய்யமுடியாத ஆண்டவன், தன்னை அறிவிப்பதற்கு ஒரு மதத்தையும் அதனை விளக்குவதற்குப் புராண இதிகாசங்களையும், இவற்றை விளக்குவதற்கு நம்மவரிலேயே சிலரையும் ஏற்பாடு செய்திருக்கின்றானே! தன்னைத்தானே பாதுகாக்க முடியாமல், அதற்காக வேறு சில ஏற்பாடுகளை உண்டாக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஒரு ஆண்டவன், எங்களையெல்லாம் படைத்துக்காத்து இரட்சிக்கின்றான் என்று சொல்லப்படுவதை நாங்கள் எப்படி நம்பமுடியும் — ஒப்புக் கொள்ளமுடியும்?

— ஈழத்தடிகள்

— வேலூர் சமூக சீர்திருத்த மாநாடு.

முரசொலி

ஜூலை போராட்ட சிறப்பிதழ்

★

புரட்சி இலக்கியங்கள் தாங்கி-புதுமை ஓவியங்கள் மிளிர

ஜூலை 16-ல் எங்கும் கிடைக்கும்

●

பொதுச் செயலாளர் அண்ணா—மற்றும் கழக, முன்னணி வீரர்கள் அனைவரும் எழுதுகிறார்கள்.

●

16 பக்கங்கள் விலை அணு 3

கூடுதலான பிரதிகள் வேண்டுவோர் ஜூலை 12-ந்தேதிக்குள் முன் பணத்துடன் விண்ணப்பிக்கவும்

விபரங்கட்கு: முரசொலி சென்னை—14

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்:—62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.